**செய்தி வெளியீடு எண்: 102/2022** **நாள்: 17.11.2022**

**பத்திரிக்கை செய்தி**

**சென்னை மெட்ரோ இரயில் திட்டம் கட்டம்-II-ல்**

**இரண்டடுக்கு வழித்தடங்கள்**

**இரண்டடுக்கு இரயில் நிலையங்கள் அமைக்கப்படும்**

**சென்னை மெட்ரோ இரயில் நிறுவன திட்ட இயக்குநர் த.அர்ச்சுனன் தகவல்**

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் இரண்டாம் கட்ட வழித்தடப் பணிகள் விறுவிறுப்பாக நடைபெற்று வருவதாகவும் இதில் தனித்துவ சிறப்பு அம்சங்கள் இடம் பெறுவதாகவும், குறிப்பாக இரண்டடுக்கு வழித்தடங்கள் மற்றும் இரண்டடுக்கு இரயில் நிலையங்கள் அமைக்கப்பட உள்ளதாக சென்னை மெட்ரோ இரயில் நிறுவன திட்ட இயக்குநர் த.அர்ச்சுனன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து சென்னை மெட்ரோ இரயில் நிறுவன திட்ட இயக்குநர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இரண்டு வழித்தடங்கள் மற்றும் 54.1 கி.மீ மொத்த நீளத்திலான சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின் கட்டம்-I, தற்போது முழுமையாக இயக்கப்பட்டு வருகிறது. கோவிட்-2019 பெருந்தொற்று ஊரடங்கிற்கு பின்னர், பயணிகளின் எண்ணிக்கை சீராக அதிகரித்து வருகிறது. சென்னைப் பெருநகர் பகுதியில் அதிகரித்து வரும் போக்குவரத்து தேவைகளுக்கு கட்டம் -Iஇன் வழித்தடங்கள் போதாது என்பதால் மேலும் 118.9 கி.மீ மொத்த நீளத்திலான மூன்று வழித்தடங்களுடன் சென்னை மெட்ரோ இரயில் திட்டம் கட்டம் -II செயல்படுத்தப்பட்டு வருகிறது. கட்டம் -II திட்டத்திற்கு மாநில அரசு, ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை, ஆசிய மேம்பாட்டு வங்கி, ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கி மற்றும் புதிய மேம்பாட்டு வங்கி ஆகியவை நிதியுதவி வழங்குகின்றன.

கட்டம்-II திட்டத்தின் கீழ் புறநகர் இரயில், பெருந்திரள் துரித இரயில் போக்குவரத்து, நகரப் பேருந்துகள் போன்ற ஏனைய பொதுப் போக்குவரத்துகளுடன் 21 பல்வேறு இடங்களில், சிரமமின்றி போக்குவரத்துகளுக்கு இடையே மாறுவதை உறுதி செய்யும் வகையில் பன்முக போக்குவரத்து ஒருங்கிணைப்பு செய்யப்பட்டு வருகிறது.

**உயர்த்தப்பட்ட வழித்தடப்பகுதிகளில் தனித்துவ அம்சங்கள்**

- **இரண்டு அடுக்கு வழித்தடங்கள்**: சுமார் 5 கி.மீ நீளத்திலான வழித்தடப் பகுதியில் இரண்டு அடுக்கு வழித்தடங்கள் மற்றும் மெட்ரோ நிலையங்கள் ஒரே தூணில் நிற்கும் வகையில் அமைக்கப்படவுள்ளது. ஆழ்வார்திருநகர்,

வளசரவாக்கம், காரம்பாக்கம் மற்றும் ஆலப்பாக்கம் ஆகிய 4 மெட்ரோ நிலையங்களில் இரண்டு அடுக்கு வழித்தடங்கள் அமைக்கப்படுகின்றன. இந்த நிலையங்களுக்கு பொதுவான பயணியர் மாடமும் இரண்டு வேறுபட்ட நடைமேடைகளும் இருக்கும். இதற்கென சிறப்பான கர்டர் தூக்கி வைக்கும் இயந்திரம் தயாரிக்கப்பட்டு பயன்பாட்டிற்கு தயாராக உள்ளது.

- **சமச்சீரான கேன்டிலிவர் (Cantilever) முறையிலான வழித்தட வார்ப்புகள்** : பணி இடங்களுக்கு பொருந்தும் வகையில் சமச்சீரான கேன்டிலிவர் முறையிலான வழித்தட வார்ப்புகள் சிறப்பு வார்ப்புகளாக அமைக்கப்படுகின்றன. அவற்றில் கத்திப்பாரா சந்திப்பு மிகவும் சவாலாக பகுதியாகும். அங்கு வழித்தட வார்ப்புகள் 58 மீட்டரில் ஒன்று, 100 மீட்டரில் மூன்று, 95 மீட்டரில் ஒன்று ஆகியவை 125 மீட்டர் ஆரத்துடன் கூடிய வளைவுப் பகுதியில் அமைக்கப்படுகின்றன.
- **மாநில நெடுஞ்சாலைகள் மேம்பாலத்துடன் ஒருங்கிணைத்தல்**: துரைப்பாக்கம், சோழிங்கநல்லூர், காட்டுப்பாக்கம் மற்றும் மியாட் (MIOT) மருத்துவமனை பகுதிகளில் ஒருங்கிணைக்கப்படுகின்றன.

**சுரங்கப்பாதை பகுதிகளில் தனித்துவ அம்சங்கள்**

- **இரண்டு அடுக்கு நிலையங்கள்**: சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் சாலைகளின் அகலம் பத்து மீட்டர் என்ற குறுகிய அளவில் இருக்கும் பட்சத்தில் இரண்டு அடுக்கு குறுகிய நடை மேடைகள் அமைக்கப்படுகின்றன. பட்டாளம், திருமயிலை, கச்சேரி சாலை, ஆழ்வார்பேட்டை மற்றும் பாரதிதாசன் சாலை மெட்ரோ நிலையங்களில் சுரங்கப் பாதைகள் ஒன்றின் கீழ் ஒன்றாக அமைக்கப்படுகின்றன.
- **சுரங்கங்கள் குறுக்கே செல்லுதல்**: கீழ்ப்பாக்கம், ஆயிரம் விளக்கு மற்றும் நந்தனம் ஆகிய மெட்ரோ நிலையங்களில் கட்டம் -I மற்றும் கட்டம் - II இன் சுரங்கப்பாதைகள் ஒன்றின் கீழ் ஒன்றாக குறுக்கே செல்கின்றன. அவ்வாறு சுரங்கப்பாதை அமைப்பது மிகவும் சவாலான பணியாகும்.
- **அடையாறு ஆற்றின் குறுக்கே செல்லுதல்** : வழித்தடம் 3 இல் அடையார் சந்திப்பில் அடையார் ஆற்றின் குறுக்கே சுரங்கப்பாதை செல்கிறது. அந்த சுரங்கப்பாதையின் மேல் தட்டு ஆற்று படுகையில் இருந்து ஏழு மீட்டருக்கு குறைவாக அமைக்கப்படுகிறது.

இவ்வாறு சென்னை மெட்ரோ இரயில் நிறுவன திட்ட இயக்குநர் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**

**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை – 600107.**